DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.206/2025**

Prosecution **PW.3**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | அண்ணாமலை | கிராமம் : | |
| தந்தை பெயர் : | கணேசன் | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 60 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.03.2026

1, 2 எதிரிகள் ஆஜரில்லை. சட்டப்பிரிவு 355 BNSS படி மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் தற்பொழுது சேலத்தில் குடியிருந்து வருகிறேன். மோகனூரில் நீர்வள ஆதாரத்துறையில் உதவி செயற்பொறியாளராக பணிபுரிந்து கடந்த 31.05.2025 அன்று பணி ஓய்வு பெற்றேன். தற்போது என்னிடம் காட்டப்படும் மணல் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகை சான்றிதழ் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த சான்று நான் தான் எழுதினேன். (**மணல் பெற்று கொண்டதற்கான சான்று அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) 15.10.2018 ம் தேதி குளித்தலை நீர்வளத்துறை கனிமம் மற்றும் கண்காணிப்பு பிரிவு 2ன் உதவி பொறியாளராக பணியாற்றிய போது லாலாபேட்டை காவல் நிலைய ஆய்வாளர் அவர்கள் TN-40-A-9121 என்ற பதிவெண் கொண்ட லாரியில் 2 யூனிட் மணலை கைப்பற்றி என்னிடம் கொண்டு வந்து மணலை பெற்றுக் கொண்டு ஒப்புகை சான்று வழங்கினேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. 2 யூனிட் என்பதற்கு போலிசார் ஆவணம் கொடுத்தார்களா என்றால் நான் அளந்து பார்த்தேன். அதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளீர்களா

என்றால் இல்லை. நான் அளித்த ஒப்புகை டைப் செய்யப்பட்டதாகும். அதற்குள்ள விவரங்கள் அனைத்தும் டைப் செய்யப்பட்டது தான் என்றால் சரிதான். லாலாபேட்டை காவல் நிலையத்தில் கேட்டு கொண்டதற்கு இணங்க ஒப்புகை சீட்டு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. காவல் துறை அரசு அதிகாரி என்பதால் போலிசாருக்கு ஆதரவாக ஒப்புகை சான்று அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதியை தான் போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.12 11:17:32 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கிருஷ்ணராயபுரம்.**